504

Regd. No. M. 1630. AUGUST 1922.

சுயம்பிரகாசத்துணை.

# ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்த தமிழ்ப் பத்திரிகை.

# GNANA SURIYAN

A HIGH CLASS TAMIL MONTHLY.

மலர் 1 } துந்துபிஹு ஆவணிமீ 1உ 1922ஹு ஆகஸ்டுமீ 17உ { இதழ் 5

Vol. 1 No. 5

பொருளடக்கம்.


| விஷயம். | பக்கம். |
|---|---|
| கடவுள் வணக்கம் | 97 |
| ஞானசத்தபூமிகள்—வேதாந்தபாஸ்கரன் 2-ம் பாகம் | 98 |
| சங்கீதம்—ஞானக்களஞ்சியம் | 102 |
| ஞானத்தம்பட்டம்—மணிமுத்துநாயகம் | 105 |
| உயிர்ப்பிராணிகள் மகாநாடு—காரைச்சிவனடியார் பிரசுரம் | 107 |
| தேகப்பயிற்சி—ப. வீரப்ப தஞ்சவராயன் | 109 |
| சாதனசதுட்டயம்—வேதாந்தபாஸ்கரன் 2-ம் பாகம் | 112 |
| பெண்கல்வி—S. V. G. பாலன், திருவாரூர் | 115 |
| கற்புடைமை—விளமல் சேஷாத்திரி | 117 |
| தர்மம்—R. பட்டு அய்யர், விஜயபுரம் | 119 |


இப்பத்திரிகையிலுள்ள விஷயங்களை பத்திராதிபர் அனுமதியின்றி எவரும் பிரசுரிக்க அருகரல்லர்.

# "ஞான சூரியன்"

## சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| இந்தியா, பர்மா, சிலோன்முதலிய இடங்களுக்கு | வருடம் 1-க்கு தபால்கூலி உள்பட | ரூ 1—8—0 |
| பிணங்கு, சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு | | ரூ 2—0—0 |
| தனி சஞ்சிகை விலை | | ரூ 0—3—0 |

மாதிரிப் பிரதி வேண்டுவோர் விலாசம் தெரிவித்தால் உடனே இனமாக அனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் சந்தா நம்பரைக்குறித்து எழுதினாலன்றி கடிதங்களுக்கு விடை யளிக்கப்படமாட்டாது.

சந்தாதாரராய்ச் சேரவிரும்புவோர் வி. பி. யிலனுப்பும்படி ஆர்டர்செய்யலாமேனும் முன் பணம் அனுப்பி விடுவதே உத்தமம். எனெனில் மணியார்டர் செய்தால் ரூ. 1—8—0. வி. பி. யில் ரூ. 1—11—0 ஆகும். அதனால் தங்களுக்கு 3 அணா சகாயமிருக்கிறது. முதல் சஞ்சிகையிலிருந்து விஷயங்கள் தொடர்ச்சியாய எழுதப்பட்டுவருவதால் யாவரும் ஆரம்பத்திலிருந்தே சேர்ந்து வருகிறார்கள். சந்தா தொகை ரூ. 1—8—0 சித்திரை-மீ முதல்கொண்டு பங்குனி-மீ வரையில் கணக்கு வைத்துக்கொள்ளப்படும். இடையில் சந்தாதாரராய்ச் சேருபவர்களுக்கு சித்திரைமாதப் பத்திரிகைமுதல் சேர்த்து அனுப்பப்படும்.

---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ஒருமாசத்திற்கு ... | ரூபா | 8—0—0 |
| அரை பக்கத்திற்கு | ,, | ,, | 5—0—0 |
| கால் பக்கத்திற்கு | ,, | ,, | 3—0—0 |

மொத்தமாய் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்துகொண்டால் மொத்தத் தொகையில் 100-க்கு 12½ ரூ வீதம் கழித்து வாங்கப்படும். எப்போதும் முழுதொகையை முன்பணமாயனுப்பவேண்டும்.

---

## விஷயங்கள்.

1. கடிதக்காரர்கள் அபிப்பிராயங்களுக்கு பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

2. விஷயம் அனுப்புவோர் கடிதத்தின் ஒரே பக்கத்தில் இங்கியால் தெளிவாய் எழுதியனுப்பினாலன்றி, அவ்விஷயங்கள் கவனிக்கப்படமாட்டா.

3. விஷயங்களை திருத்தவும், அவற்றில் கூட்டவும், குறைக்கவும், அவற்றை வெளியிடவும் வெளியிடாமலே விட்டுவிடவும் பத்திரிகாசிரியருக்கு பூரண சுதந்திரமுண்டு.

பத்திராதிபர்.

ஸ்ரீ கருணையானந்த மஸ்தான் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியதும் மனிதராகப்பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் வாசிக்கவேண்டிய யோக ஞான வசனசாஸ்திரமுமாகிய யோகரகசியம்

முழுப்புத்தகம் 1-க்கு ரூ 2—0—0.

கருணையானந்த மஸ்தான் சுவாமிகள்

பத்திராதிபர், ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம், திருவாரூர்.

சுயம்பிரகாசத்துணை.

# ஞானசூரியன்.

இது ஒரு சிறந்த மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தோட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு. (தமிழ் வேதம்.)

(All Rights Reserved.)


| மலர் | | இதழ் |
|---|---|---|
| 1 | துந்துபிஸு ஆவணிமீ 1உ<br>1922-ஸு ஆகஸ்டுமீ 17உ | 5 |


## கடவுள் வணக்கம்.

தேனெனத் தமிழ்சொல் கருணையானந்த
    தேசிக வுட்சிதா காய
ஞானசூ ரியன்வந் துதித்தொளி விரிப்ப
    நானிலத் துதித்தமா னிடர்கள்
நானெனு மகந்தைக் காரிருட் படலம்
    நலிந்தவ ருளமலர் விரியச்
சோனைபோ லருள்செய் சுயம்பிர காசச்
    சோதியைப் போதெலாந் தொழுவாம்.

(பத்திரிகாசிரியர்.)

யாதுமளாநினையுமந்த நினைவுக்குநினைவாகி
    யாதின்பாலும்
பேதமறநின் றுயிருக் குயிராகியன்பருக்கே
    பேரானந்தக்
கோதிலமுதூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
    கொடுத்துக்காட்டுந்
நீதில்பராபரமான சித்தாந்தப்பேரொளியைச்
    சிந்தைசெய்வாம்.

(தாயுமானவள்ளல்.)

### பிரபுலிங்கலீலை.

"கலையைமதிக்கும்புலவர்தமைச் சித்தர்குழாத்தைக்கடவுளரை
நிலையைமதிக்கும்முனிவரரைத் திசைமாமுகனையிறைவனையாச்
சிலையைமிதிக்கும்நெடியோனை விழுங்கியுமிழாத்திறன்மாயை"

என்று ஆன்றோர்களாற் கூறப்பெற்ற நீங்காத மாயா விலாச மோக ஜனனசாகரத்தை யெவ்வாறு தாண்டுவோமென்று சதா ஆத்தும விசாரணைசெய்து நிராசையாக இருக்க முயல்பவன். விரத்தியென்னும் துறவு முகூர்த்தங்களையே மனதில் சிந்திப்பவன். சுவர்க்காதி போகங்களில் வெறுப்படைபவன், தீவினைக்கு அஞ்சுபவன், எவரிடத்திலும் அன்புநிறைந்த உபசாரத்துடன் தேசகாலங்கட்குத் தகுந்த விதமாய் மிருதுவான குரலுடன் இனிய வசனங்களைப் பிரயோகம் செய்பவன், அடியார்களுக்குத் திரிகரண சுத்தியுடன் வந்தனை வழிபாடுசெய்து ஆதரிப்பவன். எங்கேனும் ஞானசாஸ்திரங்கள் இருப்பதாகத் தெரிந்தால் அதில் அதிக விருப்புற்று வாங்கி வாசித்து, அதில் சொல்லியபடி அப்பியாசிக்க முயலுபவன். வைதீக விருத்தியில் விருப்பும் இலௌகிக விருத்தியில் வெறுப்பும் சாதுசங்கப் பழக்கத்தில் ஆனந்தமும் முத்தியில் அவாவுமுள்ளவன். மேற்சொல்லி வந்த குணங்குறிகள் எவனிடத்தில் காணப்படுகிறதோ அவனே சுபேச்சையாகிய ஞானபூமியையடைந்த நிவிர்த்தன். இந்த பூமிமுதல் தனுமானசி இறுதியாயுள்ள மூன்று பூமிகளையும் அறிந்து அடைந்தவர்கட்கு அப்பியாசி அல்லது சாதகர் என்றுபெயர்.

### இரண்டாம்பூமி விபரம்.

இப்பூமி வேதாந்த சிரவண மனன இலட்சணமுடையது. அறியாமையென்னும் அந்தகாரம் நீங்கி ஆத்மவிசாரம் செய்யப் பட்டவர்கள் விசாரணையென்னும் இந்த இரண்டாம் பூமிக்கு உரித்தானவர்கள். வேதங்கள், புண்ணிய நூற்கள், தாரணை, தியானம் முதலியவைகளையும் சற்கருமங்களையும் பரிபக்குவர்கள் கேட்டு உய்யும்பொருட்டு மாசில்லாத இனிய வாக்கியங்களில் கலந்து பிரகாசிக்கச்செய்யும். சாதுக்களது சங்கத்திற் சேர்ந்து நித்தியாநித்திய வஸ்து விவேகமெய்தி, ஆகாயமானது மகா

வாயுவை அபின்னமாகத் தன்னுள் அடக்கிவைப்பதுபோல் சர்வ கலைக்கியானங்களையும் வாசித்து அறிந்து உணர்ந்து அடங்குவார்கள். சர்ப்பமானது தனது சட்டையை கழற்றியபின் திரும்பத் தரித்துக்கொள்ளாதது போலவும் மதுரமான தீங்கனிகளைப் புசித்திருந்தாலும் வமனம் செய்தபின்னர் அருவருப்பதுபோலவும் சாப்பிட்ட இலையைத் தவிர்ப்பதுபோலவும் காமக்குரோதாதிகள் அறிவின்மையின் வசத்தினாலாவது துர்ச்சகவாசத்தினாலாவது நேர்ந்தால் உடனே தவிர்த்துவிடுவார்கள். இவ்விதமான புத்தி சாதுரியமுடையவர்கள் ஞானசாஸ்திரங்களினாலும் சற்குரு தரிசனத்தினாலும் பரம இரகசியமாகிய சர்வார்த்தங்களினது நிச்சயத்தை யுணர்வார்கள்.

## மூன்றும்பூமி விபரம்.

அனேக அர்த்தங்களை கிரகிக்கும் மனமானது அந்த அனேக அர்த்தங்களை விட்டு சத்து என்னும் ஒரே அர்த்தத்தின் விருத்திப் பிரவாகமாகுங் காலத்தில் சூக்குமமாகின்றது. அவ்வித சூக்குமமான மனதையுடைய நிதித்தியாசனமென்னும் சிந்திப்பானது தனுமானசியாகும். இந்த தனுமானசியும் முன்சொல்லிய சுபேச்சை விசாரணையாகிய மூன்று பூமிகளும் சாதனபூமிகள் அல்லது அப்பியாச பூமிகள் என்று சொல்லப்படும். ஆகையினால் இம்மூன்று பூமிகளில் ஏறியவர்களுக்கு அப்பியாசிகள் அல்லது சாதகர்கள் என்று மேற்சொல்லி யிருக்கிறது.

மூன்றும்பூமியை அடைந்தவன் ஞானசாத்திரார்த்தங்களின் ஆசாரத்தைக் கைக்கொண்டு தத்துவ ஞானங்களைத் தெளிவாகச் சொல்லுகின்ற சரிதங்களை கேட்பதில் அதிக ஆவல் அடைவான். பூமி பஞ்சணையாகவும் ஆகாயம் மேல்கட்டியாகவும் காற்று சாமரமாகவும் சந்திர சூரியர்கள் விளக்காகவும் நிராசை மனைவியாகவும் கேவலம் இன்பமாகவும் சுகதுக்காதிகளைச் சமமாக நினைப்பான்.

(இன்னும் வரும்)

## ச ங் கீ த ம்.

### விருத்தம்.

பூதமுதலாறு தத்துவங்களறியாத பொருளைக்காணப்
போதமுறுபேரின்பப் பாமாலைபலபுகன்று பொருந்தக்கூற
நாதவடிவாகியசங்கீதமதை வகுத்துமறை நாலின்மூன்றும் [வாம்.
வேதமெனப்பெரியோர்கள் நவின்றதனைநன்குணர விரித்துச்சொல்

[இதனை வாசிக்கப்புகும் சங்கீத வித்துவான்களே! நீங்கள் 'காய்தல் உவத்தல் அகற்றி ஒருபொருட்கண் ஆய்தல் அறிவுடையோர் கண்ணதே' என்னும் கருத்தைச் சிந்தித்துச் சமநோக்குடன் வாசித்தறிவீர்களெனப் பிரார்த்திக்கின்றனன். சங்கீதம் எல்லோருக்கும் பொதுவானது என்பதின் இரகசியம் கவனிக்கத்தக்கதே]

சங்கீதம் என்பது ஸ, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு அட்சரங்கள் கொண்ட அருமையான வித்தை. இந்த ஏழு அட்சரங்களே மாறிமாறி, எடுத்தல், நலிதல், படுத்தல் என்பவை கட்கு முறையே எச்சுஸ்தாயி, மத்திமஸ்தாயி, மந்தரஸ்தாயி என்னும் சூட்சுமமான முயற்சிகளினால் எவ்வகைய இசைகளுக்கும் காரணமாகப்பொருந்தி நிற்கின்றன. இவை ஆரம்பத்தில் *32 வகையான முக்கிய இராகங்களோடும் வேறு பல இராகங்களோடும் தோன்றியிருந்து, இக்காலத்தில் இந்துஸ்தானி முதலிய பல பாஷைகளின் இராகங்கள் கலக்கப்பெற்று இவ்வளவு என்று வரையறுத்துச் சொல்வதற்கு இயலாத அளவிறந்த இராகங்களுடன் வழங்கப் பெறுகின்றன.

இவையன்றி பலவகைப்பட வழங்கும் இராகங்களை இங்கு கூறில் பெருகுமென நிறுத்தப்பெற்றது.

---

* பைரவி, தேவக்கிரியை, மேகராஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராமக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாக்கரி, காந்தாரி, சாரங்கம் என்பனவாம்.

இத்தகைய சங்கீதமானது சகல பிராணிகளேயும் தன் வசப் படுத்தும் வல்லமையுடையதாய் இருக்கின்றது. அதிக சாது வான ஆடு மாடுகளும் வேணுகானம் என்னும் மூங்கிற்குழலாய புள்ளாங்குழல் முதலிய கீதத்தைக் கேட்டுத் தம்மை மறந்து நிற்கின்றன. அவற்றை மேய்ப்பவரும் அவை நீர் அருந்தும் போது இன்னிசையெழுப்பி மகிழச்செய்கின்றனர். சில துஷ் டத்தனமுள்ள பசுக்கள் இனிய கீதத்தைக்கேட்டு மனம் அடங் கிப் பால் கறக்கின்றன. நகராத பெரிய மலேக் கற்களேயும் 'ஏலப்பா ஏலோ' என்று பாட்டுப்பாடி நகர்த்துகிறார்கள். வண்டி கள் ஏருகளில் போகும்போது சாலம்போட்டுப் படுத்துக்கொள் ளுகின்ற மாடுகளும் காளேப்பாட்டுப் பாடினல் நடந்து செல்கின் றன. பூசாரிகள் அடிக்கும் உடுக்கையின் நாதமானது சிலர்க்கு ஆவேசம் எழச்செய்கின்றன. தம்புரா, பிடில், வீணே முதலிய வாத்தியங்களின் இன்னிசையால் எலி, சர்ப்பம் முதலிய பிராணி களே ஒரு பெரியவர் தருவித்தார் என்பது கர்னபரம்பரை.

ஆங்கிலேய பாடப் புத்தகத்திலும், ஒரு இந்துஸ்தானிக் காரர் இன்னிசையெழுப்பி எலிகளேத் தருவித்ததாகப் படிக்கப் பெற்றிருக்கிறேம். கொடியவிஷ சந்துக்களாகிய சர்ப்பங்களும் மோடி முதலிய வாத்தியத்தின் ஓசையைக்கேட்டு அசைவற்று நிற்கின்றன. மரம், மலே முதலிய இந்திரிய வுணர்ச்சி யில்லாத அசரப்பொருள்களும் இன்னிசையைக் கேட்டு இளகிநின்றன என்னும் புராணக்கூற்றும் பலவுள. அவற்றையும் இக்காலத்துப் பௌதிக சாஸ்திரிகளாகிய தத்துவ சாஸ்திரிகள் நியாயமென்றே அங்கீகரிக்கின்றனர். பிரான்சு தேசத்தில் பெரிய வைத்திய சாலேகளேக்கட்டி அதில் சித்தப்பிரமை முதலிய மனேவியாதி யஸ்தர்களே ஔடதப் பிரயோகமின்றிச் சங்கீதம் ஒன்றினலேயே பூரண சௌக்கியப்படுத்தி வருகிறதாகப் பத்திரிகைகளில் படிக் கப் பெற்றிருக்கிறேம். சிறிய குழந்தைகளும் தமது அன்னே யர் முதலியோர் பாடும் தாலாட்டு என்னும் இன்னிசையைக் கேட்டு ஆனந்தங்கொண்டு, அழுகையை நிறுத்தி அயர்ந்து நித்

திரை செய்கின்றன. ஆரணியங்களில் சஞ்சரிக்கும் மான்கள், இன்னிசையைக்கேட்டு மதிமயங்கி தம்பம்போல் அசைவற்று நின்று வேடர்கள் கையில் சிக்கிக்கொள்ளுகின்றன. கேகயப்புள் என்னும் அசுணப் பறவையானது இனிய வீணுகானத்தைக் கேட்டவுடன் தன்னுயிரையும் பொருட்படுத்தாமல் கானமுண் டாக்கப்பெற்ற இடத்திற்கே வந்துசேரும். ஆதலால்,

விஞ்சைமாதர்தம்யாழொலி கேட்டமாவேடர்
அஞ்சிலோதியர்பதலைகேட் டயரசுணம்போல்.

என்று பிரபுலிங்கலீலை விளக்குகின்றது. எவற்றிற்கும் இரங் காத கல்நெஞ்ச முடையவர்களைச் சங்கித இன்னிசையால் மனம் இரங்கச் செய்துவிடலாம்; பற்றனைத்தும் முற்றத்துறந்த முனீஸ் வரர்களும் இன்பமுற்று, மூன்ரும் வேதமாகிய சாமகானம் பாடு கின்றனர். சமர்க்களத்தில் யுத்தவீரர்களுக்கும் குதிரைமுதலிய மிருகங்களுக்கும் வீராவேசம் எழச்செய்வது இரணபேரிகை யின் உற்சாகமேயன்றி, அவ்வவற்றின் உடல் வன்மையன்று.

கலிவெண்பா.

பொங்கும் பசாசும் புகலு மிசைக்கவிகேட்
டங்கே தலைசுழற்றி யாடலையோ—துங்கமுடன்
நாட்டிற் குழந்தைகளும் நற்றொட்டி கட்டியுந்தா
லாட்டுகின்ற பாட்டுக் கழுகாதே—கூட்டமிட்டு
ஏலப்பா! ஏலவெனும் இந்தச் சிறுகவிக்கு
ஞாலத்தே கல்லும் நகருமே—சாலமுழு
மாட்டுகளி லுண்டுகள்ள மாடதுதா னுங்காளைப்
பாட்டுப் படித்தால் படுக்காதே—கேட்டிலையோ
கூடித் தூரத்திவந்து குத்துகின்ற தூர்ப்பசுவும்
பாடிக் கறந்தாக்கால் பால்தருமே—பாடித்தான்
சொற்புலவர் வந்துகவி சொன்னல் மனம்கரைந்து
கற்பசுவும் பாலைக் கறக்குமே.

எல்லாம் வல்லவரும் எல்லாங் கடந்தவருமாக விளங்கும் முழுமுதற் கடவுளரும் இன்னிசையிற் கட்டுண்டு, அதனைப்

பாடும் அன்பர்களுக்கு இன்னருள் பாலிக்கின்றனர்; இவ்வாறு எதையும் செய்யவல்லது சங்கீதம் என்பது அநேகருடைய அபிப்பிராயம்; ஆயினும் சங்கீதமானது ஞானேந்திரியங்களில் ஒன்றாகிய செவிப்புலனால் நுகரப்படும் ஒருவித உணர்ச்சியென்று அறிந்தவர்கள் மிகச் சிலரே. மேற்சொல்லி வந்தபடி 'சங்கீதமானது எவற்றையும் வசப்படுத்த வல்லது' என்றெண்ணுவது வாஸ்தவமேயெனினும், சங்கீதமானது கடவுளைக் கட்டுப்படுத்துமென்றும்; கடவுளானவர் இன்னிசைச் சங்கீதத்திற் கட்டுண்டு, அதனைப்பாடும் அடியார்களுக்கு இன்னருள் பாலிக்கின்றனர் என்று எண்ணுவதும் தப்பபிப்பிராயமே. ஏன்? கடவுள், பக்தி ஒன்றுக்குமாத்திரம் கட்டுப்படுவாரேயன்றி, சங்கீதம்போன்ற பல இந்திரிய நுகர்ச்சிகளுக்கு ஒருபோதும் கட்டுப்படமாட்டார். பஞ்சபாண்டவர்களில் ஒருவராகிய சகாதேவன், ஸ்ரீகிருஷ்ண பரமாத்மாவை அன்பினால் கட்டினாரேயன்றி, சங்கீதத்தினாற் கட்டவில்லை யென்பதை வேதாந்த பாஸ்கரன் 4-ம் பாகமாகிய நமது பக்தி மகத்துவத்தில் விரிவாகக் கூறியிருப்பதை மறந்து விடாமல் ஞாபகத்தில் வைக்கவேண்டும். ஏனெனில்,

(இன்னும் வரும்) (ஞானக்களஞ்சியம்.)

---

## ஞானத்தம்பட்டம்.

### இரண்டாவது சாமம்.

(80-ம் பக்கத் தொடர்ச்சி.)



திடும்! திடும்!! திடும்!!!

ஜனங்களே! உலகத்தில் அரிதினு மரிதாகிய மானிடப் பிறவியை அடைந்த நீங்கள் இப்பிறப்பினா லடையத்தக்க ஆன்மலாபத்தை காலமுள்ளபோதேயறிந்து அடையவேண்டும்.

உலகமானது ஆசையாலும், வினையினாலும், பல சிந்தனைகளாலும் கட்டப்பட்டிருக்கிறது. ஆயுள்நாசத்தை அறிவதில்லை ஆகையால் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்!

அந்த ஆன்மாலாப மெதுவென் றறியவேண்டில்; எல்லா அண்டங்களையும் எல்லாப் புவனங்களையும் எல்லாப் பொருள்களை யும் எல்லாச் சீவர்களையும் எல்லா வொழுக்கங்களையும் எல்லாப் பயன்களையும் தமது பூரணவியற்கை விளக்கமாகிய அருட்சத்தி யால் தோன்றிவிளங்க விளக்கஞ்செய்விக்கின்ற இயற்கையுண்மை வடிவினராகிய கடவுளின் பூரணவியற்கை யின்பத்தைப் பெற்று எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்தும் எவ்வளவுந் தடை படாமல் வாழ்கின்ற ஒப்பற்ற பெரியவாழ்வே, இந்த மானிட யாக்கையைப் பெற்ற நீங்கள் அடையத்தக்க ஆன்மலாபமென் றுண்மையாக அறியுங்கள்.

இயற்கை இன்பத்தைப்பெற்று தடைப்படாமல் வாழ்கின்ற அந்தப் பெரிய வாழ்வை நீங்கள் எதனால் அடையக்கூடுமெனில், கடவுளின் இயற்கை விளக்கமாகிய அருளைக்கொண்டே அடை யக்கூடும். கடவுளின் இயற்கை விள்க்கமாகிய அருளை எதனாற் பெறக்கூடுமெனில், சீவகாருணிய வொழுக்கத்தினால் பெறக் கூடுமல்லது வேறெந்த வழியாலும் சிறிதும் பெறமுடியாது என்று அறியுங்கள்.

> காமஃக்ரோதச்சலோபச்ச தேஹேதிஷ்டந்திதஸ்கரா:
> ஜ்ஞாநரத்நாபஹாராய தஸ்மாத்ஜாக்ரதஜாக்ரத:.
>
> ஜந்மதுக்கம்ஜரா துக்கம் ஜாயா துக்கம்புந:புந:
> ஸம்ஸாரஸாகரம்துக்கம் தஸ்மாத்ஜாக்ரதஜாக்ரத:.
>
> மாதாநாஸ்திபிதாநாஸ்தி நாஸ்திபந்துஸஹோதர:
> அர்த்தம்நாஸ்திக்ருஹம்நாஸ்தி தஸ்மாத்ஜாக்ரதஜாக்ரத:.
>
> ஆசயாபத்ததேலோகே கர்மணுபஹு—சிந்தயா
> ஆயுக்ஷீணம்நஜாநாதி தஸ்மாதஜாக்ரதஜாக்ரத:.

நமது மகாஜனங்களே! சரீரமென்னும் வீட்டில் காம, குரோத, லோப, மோக, மத, மாற்சரியம் என்னும் ஆறு கள்வர் கள் நாம் ஏமாறும் சமயம்பார்த்து "ஞானம்" என்னும் ரத்தி னத்தை கொள்ளைகொண்டு போக ஒவ்வொரு நிமிடத்தையும் எதிர்பார்த்த வண்ணமாக இருக்கின்றனராகையால் நீங்கள் அஞ்

ஞான நித்திரையை நீக்கி மெய்ஞ்ஞான விழிப்பையடைந்து ஜாக்கிரதையாக இருங்கள். இப்பொய்யுலகில் நமதென்று கருதப்படும் தாய், தந்தை, பந்து, சகோதரர், பொருள், வீடு முதலியவை (நீர்மேற்குமிழிபோல்) அழிவுடையது. பிறப்பு துக்கம், மூப்பு துக்கம், மனைவி துக்கம், உலகவாழ்க்கை துக்கம் ஆகையால் நீங்கள் ஜாக்கிரதையாக இருங்கள்.

(இன்னும் வரும்)

(மணிமுத்து நாயகம்)

## மனிதர் வாய்ப்படும் அகில உலக உயிர்ப்பிராணிகள் மகாநாடு.

---

(84-ம் பக்கத் தொடர்ச்சி.)

மூலமாக எவ்வளவோ சொல்லமுடியாத நன்மைசெய்து வருகிறோம். இந்த நாட்டு ஜனங்கள் இரவு பகலாகத் தோத்திரம் புரிகிற கடவுளர்கள், நம்மிடங் கொண்டுள்ள கருணையினால் அவர்களுக்கும் உயரத்தில், நமக்கு இருப்பிடந்தந்து அவர்களது வரவை நம்மைப் பார்த்தறியும்படியான பெருமையையும் நமக்களித்திருக்கிறார்கள். உண்மை யிப்படியிருக்க இவைகளையெண்ணாமல் நமது கூட்டத்தாருக்கு மனிதர்கள் துன்பத்தை யுண்டுபண்ணுவதால் இந்தப் பெரிய கான்பரன்ஸ் மூலமாகப் பல தீர்மானங்களைச் செய்து ராஜாதிராஜராக விளங்கும் கடவுளுக்கும் உலகத்திலுள்ள மற்ற உத்தியோகஸ்தர்களுக்கும் அனுப்பவேண்டும். நமது கான்பரன்ஸ் இனிதுமுடியக் கடவுள் கிருபைசெய்வாராக என்று பேசிவிட்டுத் தமது ஆசனத்திலமர்ந்தார்.

திருவள்ளுவநாயனார் திருமூலதேவர் ஸ்ரீராமலிங்க சுவாமிகள், தாயுமானவள்ளல், புத்தர்பிரான், ஸ்ரீகருணையானந்தவள்ளல், காந்தியடிகள், சிபிச்சக்கிரவர்த்தி, மநுநீதிகண்டசோழமன்னன் கொடிபடரத்தேரீந்த பாரிவள்ளல் முதலிய பல ஜீவகாருண்ய சீலர்கள் "நாங்கள்வர முடியவில்லை; கான்பரன்ஸ் இனிது நடைபெறட்டும்" என்று அனுப்பியிருந்த தந்திகள் படிக்கப்பெற்றன.

அதன்பிறகு சுப்பிரமணியக் கடவுளது கொடியாகவிருந்து வெற்றியையே கொடுத்துவருகிற ஸ்ரீலஸ்ரீ கோழியப்ப நாயனாரெழுந்து,

"நாங்கள் செய்யும் உதவியை யேற்றுக்கொண்டும், வாயில்லாத ஏழைகளாகிய எங்களிடத்தில் இரக்கங்காட்டியும், நாங்கள் கடவுளுக்கு வாகனங்களாகவும் கொடிகளாகவுமிருந்து வருவதை யுத்தேசித்தும், எங்கள் உயிருக்கு எப்படியும் துன்பம் வராமல் காப்பாற்றும்படி மனிதர்களாகிய உங்களை வணக்கமாக வேண்டிக் கொள்கிறோம்" என்ற தீர்மானத்தைப் பிரரேபனை செய்து கம்பீரமான குரலில் பின்வருமாறு பேசினார்:—அன்பர்களே! இந்த உலகமும் இந்த உலகத்திலே வாழ்ந்துவருகிற மனிதர்களும் நாமும் மற்றையோரும் கடவுளருளாலே தான் பிறந்து வளர்ந்து வருகிறோம். ஆனால் நம்முன்னோர்கள் செய்த தவத்தால் நமது சகோதரர்களுள் ரிஷபதேவர் முதலியோரை சிவபெருமானும், கருடாழ்வார் முதலியோரை விஷ்ணுமூர்த்தியும் மூஷிகப் பிரபுவை மூத்த பிள்ளையாரும், எருமையண்ணனாரை தர்மராஜாவும் நமது அக்கிராசனர் வமிசத்தாரையும் எனது குலத்தவரையும் கந்தக்கடவுளும் அபயங்கொடுத்துக் காத்து வருவதோடு, பெரிய முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் கிடைக்காத பெரும்பதவியில் வைத்திருக்கிறார்கள். நம்முடைய ஜாதி கேவலமானதல்ல. பரம்பரையாகவே பெருமைபெற்றது. உலகத்து ஜனங்கள் நமது பன்றி வமிசத்தாரைப் புத்தியில் அவ்வளவு சிறந்தவர்களல்லரென்று சாதாரணமாக உண்மையறியாமல் கருதுகிறார்கள். மகாவிஷ்ணுவானவர், அப்படியல்ல அவர்களே சிறந்தவர்களென்று உலகத்தார் அறிவதற்காகப் பன்றியுருவமெடுத்து வேதத்தைக் காப்பாற்றினார். பரமசிவன் பன்றிக்குட்டிகளுக்குத் தாமே அவ்வுருவங்கொண்டு பால் கொடுத்துக் காப்பாற்றினார். நமது குலத்தில் நாரைச்சிவமும் கரிக்குருவிப்

---

(காரைச் சிவனடியார் திருக்கூட்டத்தின் துண்டுப் பிரசுரம்.)

(இன்னும் வரும்.)

# தேகப்பயிற்சி.

சுவர்வைத்தன்றோ சித்திரம் எழுதவேண்டும் என்ற பழமொழிப்படி ஜீவக்கிரகமாகிய நமது தேகத்தைக் கொடுநோய்களின் இடையூறுக்கு உட்படுத்தாது, அரோக திடஸ்திதியில் வைத்துக்கொள்ள முயலவேண்டும். வேலியைச் சரிவர ஒழுங்குபடுத்தினல் அன்றி தோட்டத்திலுள்ள கொடி செடிகள் அழிவுறுவதுபோல் யாக்கையாகிய வேலியைத் திடஸ்திதியில் வைத்துக்கொள்ளாவிடில் நோய்களால் ஆன்மாவும் சோர்வும் பீதியும் அடையும். அதனல் எவ்விதக் காரியத்தையும் செவ்விதில் முடிக்கத்தகுந்த சக்தியிராது. மனச்சோர்வடையும் காலத்தில் தேகச்சோர்வும், தேகச்சோர்வடையும் காலத்தில் மனச்சோர்வும் அடைவது அனுபவம். அதாவது மனமானது கவலையாலும், அமித ஆராய்ச்சியினலும் மெலிவடையும் காலத்தில் தேகத்திற்குச் சுறுசுறுப்பில்லாமையும் மெலிவும் உண்டாவதும், அதிக வேலையினலோ, வியாதியினலோ வருந்துங் காலத்தில் மனது குதூகலம் இன்றிச்சோர்வடைவதும் அனுபவத்தில் கண்டறிந்த விஷயமேயாம். ஆதலால் தேகவுறுதியே மனேவுறுதிக்குக் காரணமாகும். மனேவுறுதியினலேயே எவ்வித காரியத்தையும் சாதிக்கலாம். மனேவுறுதியின்றேல் ஒருகாரியமும் செவ்வனே செய்து முடிக்க வன்மை உண்டாகாது. ஆதலால் ஜீவகோடிகள் உய்தற்பொருட்டு அருளே திருமேனியாகக்கொண்ட முழுமுதற் கடவுள் அளித்துள்ள அவயவங்களை அததற்கான செயல்களிற் பயிற்றித் திடமுறுத்துவது நமது கடமை. அங்ஙனம் திடப்படுத்துவதற்குத் தேகப்பயிற்சியே முக்கிய ஆதாரமாம். துலக்காத ஆயுதம் துருப்பிடிப்பதுபோல் அததற்குரிய செயல்களிற் பயிற்சியில்லாத அவயவங்களும் மெலிவு என்னும் துருப்பிடித்துப் போகின்றன. துலக்கிப் பழக்குவதால் ஆயுதங்கள் பெரிதும் பயன்பட்டு நன்மை அளிப்பதுபோல் தேகப்பயிற்சியால் யாக்கை திடமுற்று நன்மை பயக்கும்.

அத்தகைய தேகப்பயிற்சியானது, தேகப்பிரயாசையால் ஜீவனம்செய்து வருபவர்க்கு அவரவர் செய்யும் தொழிலே தகுந்த தேகப்பயிற்சி யாதலால் அவர்களுக்கு அவசியமன்று. அங்ஙனம் உழைத்து ஜீவனம் செய்பவர்கள் பெரும்பாலும் பலவித நோய்களால் பீடிக்கப்படாமல் அரோகதிடகாத்திரராய் வாழ்வது பிரத்தியட்சம். ஆதலால் தேகப்பிரயாசையற்ற மாணவர்கட்கும் உத்தியோகஸ்தர்களுக்கும், தமக்குக் கடவுள் அளித்துள்ள அவயவங்களின் தொழிலும் பயனும் இன்னதென்று அறியாமல் உண்பதும் உறங்குவதுமே பயிற்சியாக உடைய சுகவாசிகட்கு தேகப்பயிற்சி இன்றி அமையாதது என்பது அமையும். இங்ஙனம் தேகப்பயிற்சி அத்யாவசியமாயது என வலியுறுத்திக் கூறுவதால் ஒவ்வொருவரும தற்காலத்தில் "கலிகால பீமன்" என்று பெயர்பெறற ராமமூர்த்தி ஸாண்டோ ஆய்விடவேண்டும் என்பது நோக்கமன்று. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழியல்லவா? ஆதலால பிணிகளால் பந்திக்கப்பட்டு வாழ்நாளெல்லாம துன்பத்திலேயே கழிக்காமல் தேக சுகத்தோடும வாழத் தேகப்பயிற்சியே முக்கிய உபகரணம் என்பதுவே கொள்ளக் கிடந்ததாம்.

தேகம் திடஸ்திதியில் இருக்கவேண்டும் என்றால் கேவலம்! அங்கத்தில் நீண்டும் விசாலித்தும் இருப்பதன்று. ஊதிபெருத்தும் உத்திரத்துக்காகுமா? என்றபடி இவர்கள் "தட்டிவிட்டால் எட்டுக் குட்டிக்கரணம்" என்ற ஸ்திதியில் இருக்கிறார்கள். தவறி வீழ்ந்துவிட்டாலோ வந்தது மோசம்! மீண்டு எழுந்திருக்கவும் முடியாமல் விழித்துத் திண்டாடுகிறார்கள். இவர்களை நடைப்பிணமென்றே சொல்லலாகும்.

நமது முன்னோர்கள் ஆன்ம விசாரணைக்குரிய சாஸ்திரங்களையும், ஆயுர்வேதம், வானசாஸ்திரம் முதலிய அரும்பெரும் நூல்களை நமது முன்னேற்றங்கருதி இயற்றிப்போயினர். அது போலவே சிலர் தேக அவயவ அமைப்புகளை ஆய்ந்துணர்ந்து அவ் வுறுப்புகள் வலியுறுமாறு சிலம்பம், கதை சுழற்றல் முதலிய

அநேகவிதப் பயிற்சிகளையும் ஏற்படுத்தினர். அப்பயிற்சிகளையே அவர்தம் பின்வந்தாரும் கையாடிப் பலனடைந்தனர். காமோச அவரியற்றிய நூல்களை அயல்நாட்டார் கவர்ந்துசென்று ஆராய்ச்சி செய்து அவைகளின் பெரும்பயனை அனுபவிக்கும்படி விட்டது போலவே தேகப்பயிற்சியையும் கருதாதுவிடுத்தோம். அவ்விதப் பயிற்சிகளைக் கையாடிய நமது முன்னோர் 100, 120 முதலிய நீண்ட ஆயுளை அனுபவித்தனர். இக்காலத்திலோ மேல்நாடு களில் சராசரி வயது 43, 45 ஆயிருக்க நம்நாட்டில் 23 ஏ, சராசரி வயதாய்விட்டது.

பால்யபருவமே தேகப்பயிற்சிக்குத்தக்க காலமாகும். தற்காலத்திய இந்திய பாடசாலைகளில் நரம்புகள், தசை நாறுகள், எலும்பு முதலிய தாதுக்கள் வலியுறத்தகுந்த தேகப்பயிற்சி நடைபெறுவதாகத் தெரியவில்லை. மற்ற விஷயங்களில் எல்லாம் மேல்நாட்டாரைப் பின்பற்றுவதே மேலான நாகரீகம் என்று கருதும் வித்தியா அதிகாரிகள் அவசியமான தேகப்பயிற்சியிலும் அம் மேல்நாட்டாரைப்போல் அவ்வளவு சிரத்தையெடுக்கவேண்டும் என்பதை கரதலாமலகம்போல் நன்குணர்ந்து நமது செல்வச் சிறுவர்களுக்கு உயர்தரத் தேகப்பயிற்சிசெய்து வருவார்களாயின் சரீரவலிமை பெற்று அபோகதிடகாத்திரர்களாக வாழ்வார்களென்பது நிச்சயம். அனேக யோகசாஸ்திரங்களில் தேகப் பயிற்சியையும் ஒருவித அப்பியாசமாக ஏற்படுத்தியிருக்கிறது. ஏனெனில், பிராணாயாமம் முதலான கரும யோகங்களாலும் அதற்குரிய காயகற்பங்களாலும் சரீரத்தில் வலுவேற்பட்டு அந்த வலுவினால் ஆன்மலாபமடையவேண்டும் என்பதே. அதுபோல் தேகப்பயிற்சியானது ஆன்மலாபம் அடைவதற்கும் இன்றியமையாத பெரிய சகாயமாயிருக்கிறது. ஆதலால் மானம் கெட்டாலும் வயிறு நிரம்பினாற்போதும் என்று துணிந்து எவ்விதத்திலாயினும் பணத்தைச் சேர்த்தலும், சொற்ப அதிகாரம் வகித்தலுமே பெரிதெனக்கருதி வாணாளை வீணாளாக்கிய நமது இந்திய மாணவர்கள், கொல்லை நிலத்தன்றோ தென்னம்பிள்ளை வைக்கவேண்டும் என்பதை அறியாமல் அந்த உத்தியோகம்

வேண்டும். இந்த உத்தியோகம் வேண்டும் என்று மனப்பால் பருகிக்கொண்டு இரவுபகலாய்த் தம்மனதைப் பயனில்லா வாசிப்பிலேயே கட்டுப்படுத்தி மூளைக்கு அமிதவேலையைக் கொடுத்துச் சோர்வடையச்செய்து யாதொரு தேகப்பயிற்சியும் செய்யாமல் தமது தேகத்தை நாடோறும் மெலியச்செய்து பலவித நோய்களுக்கும் ஆளாகிறார்கள். அந்தோ! இவர்கள் யாக்கை மெலிவடையவே தமது முக்கிய நோக்கமான உத்தியோகத்தை வகிக்கச் சக்தியற்றவராகிறார்கள். அப்படி உத்தியோகம் பெற்றாலும் சீக்கிரத்தில் பல்வித நோய்களுக்கு இரையாகின்றனர். ஆதலால் மேல்நாட்டுப் பாடசாலைகளிற்போல் நம்நாட்டுப் பாடசாலைகளிலும் தேகப்பயிற்சியைப் பற்றி அதிக சிரத்தை எடுக்க வேண்டுவது அவசியமாகும். அது நமது தேச முன்னேற்றத்திற்கு ஓர் ஆதாரம் என்பதை வித்தியா அதிகாரிகளும் நமது மாணவநேயர்களும் உணரவேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

(இன்னும் வரும்)

ப. வீரப்பத்தருசவராயன்.

---

## சாதனசதுட்டயம்,

(86-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்ற தாயுமான வள்ளலின் கருத்தின்படி பிறரை வெல்வதிலேயே முழுநோக்கமாயுடைய வித்துவான்களுக்கு ஆத்துமாவொன்றே நித்தியம் அதற்கன்னியமான தேகாதிப் பிரபஞ்ச வடிவ அநாத்மா அனித்தியம் என்னும் வடிவினதாகிய பேத ஞான விவேகம் உண்டாயிருக்கும். ஆனால் அஃதேன் வைராக்கிய முதலான பிறசாதனங்களுக்கு ஏதுவாகிறதில்லை யென்றாலோ! பண்டிதர்கட்கு நூலாராய்ச்சியினால் விவேகஞான முண்டாயினும் அஃது நிட்காம கருமோபாசனைகளால் பரிசுத்தமின்றிய மலின அந்தக்கரண பூமியினின்றும் முளைப்பதாதலால் பாலைநிலத்தில் நடப்பெற்ற கதலிவிருட்சத்தைப்போல் பயனற்றதாகின்றது. சுத்த அந்தக்கரணமுள்ள சாதகனுடைய இருதய பூமியாகிய உரமுள்ள சதுப்புநிலத்தில் நடப்பெற்ற கதலிவிருட்சத்தைப்போல் பயனுடையதாகி பரம்பரைக்கு ஏதுவாகின்றது.

(2) விராகமானது மந்தவிவேகம், சங்கவிவேகம், இந்திரிய நிக்கிரகம், மனோநிக்கிரகம் என நான்கு வகையாம். அவற்றுள்:—

1. மந்தவிவேகம் என்பது அற்பஞானம் உண்டாயிருத்தல். 2. சங்கவிவேகம் என்பது மஹான்களுடைய சற்சங்கப் பழக்கத்தால் துர்க்குணத்தை நீக்கி நற்குணங் குடிகொள்ளுதலால் உண்டாகும் உற்சாகம். 3. இந்திரிய நிக்கிரகம் என்பது பஞ்சேந்திரியங்களை அவற்றின் இஷ்டம்போல் எதிலும் தாக்காதபடி தடுத்தல்.

மனோநிக்கிரகம் என்பது மந்தம், தீவிரம், அதிதீவிரம் என மூவகையாகும்.

பெண்சாதி பிள்ளை செல்வம் முதலான நாசத்தால், சம்சாரத்தை வெறுக்கும் புத்தி விருத்தியே மந்தமாகும். பெண்சாதி பிள்ளை செல்வம் முதலானவைகளா லுண்டாகும் சுகத்தை விரும்பாமலிருக்கும் புத்தி விருத்தியே தீவிரமாகும். இராட்டினத்தின் சுழலைப்போல் மாறிமாறித் தொடரும் ஜனனநோயென்னும் ஆவிருத்தியை யுணர்ந்து இச்சையில்லாதிருத்தலே அதிதீவிரம். இந்த அதிதீவிரமுள்ளவன், பசிமிகுந்தவன் ஆகாரத்தை தேடுவதுபோலவும், தாகமிகுந்தவன் தண்ணீரைத் தேடுவதுபோலவும், வேதாந்தமாகிய முத்திமார்க்கத்தை ஆசிப்பான். பொன்னாற்செய்து அநேக நவரத்தினங்களும் வைத்திழைக்கப்பெற்ற மாலையை ஒருஆபரணமாக மதிக்கப்படுவதுபோல், சமம் தமம் முதலான சட்சம்பத்திகளை வெவ்வேறாக மதிக்கப்பெற்றாலும் பரஸ்பரம் ஒன்றற்கொன்று சோபானம்போல் உதவிசெய்தலால் அவை ஆறும் ஒரே சாதனமாக மதிக்கப் பெறுகின்றன. அதன் விபரம் பின்வருமாறு:—

(1) அகக்கரண தண்டமாகிய மனமடங்குதலென்னும் சமம் இல்லாவிடின் தமம் என்னும் புறக்கரணமாகிய தசேந்திரியங்களும் அடங்கமாட்டாவாகையால், சமம், தமத்தை அடக்கியாளுகிறது. ஆதலால் தமம் சமத்தை விரும்புகிறது.

(2) மனவடக்க மில்லாவிடின் தந்தை, தாய், தமர், தாரம், பிள்ளை, செல்வமாதி விடயானந்தங்களிற் பந்தமுடைய மனதிற்கு உபரதி (நிராசை) வருவது துர்லபம். ஏனெனில் பாலும் சோறு மாகிய உத்தம ஆகாரத்தால்போஷித்துக் கட்டி வளர்க்கப்பெற்ற பூனையானது எலியைக்கண்டவுடன் அதன்பேரில் பாய்வதுபோல், ஈடணாத்திரயங்களில் நிராசைபெற்ற மனதும், தடுத்தல் (கிரோதம்) என்னும் கயிற்றால்கட்டி வளர்க்காவிடின் விடயாதிகளிற் பாய்ந்துதிரியும். ஆதலால் சமமானது தமத்தையடக்கி ஆண்டது போல் 3-வதாகிய விடல் என்னும் உபரதியையும் அடக்கியாளுகிறது. ஆதலால் உபரதியும் சமத்தை விரும்புகிறது.

(3) இன்பதுன்பம் பசிதாகம் சீதோஷ்ணமாதி இருவினைகளைச் சகிப்பதும் சமமாதலால் சகித்தலும் சமத்தை விரும்புகிறது.

(4) மனவடக்கமில்லாவிடின் தத்துவமசி வாக்யார்த்தத்தின் பிரயோசனமான பிரம்ம சொரூபமாகிய தமது ஆன்ம சொரூபத்தியானத்தில் சித்தம் ஏகாக்கிரத்தன்மை யடையாதாதலால் சமாதானமும் சமத்தை விரும்புகிறது.

(5) மனவடக்கமில்லாவிடில் வேதாந்த நூற்களிலும் சற்குருமூர்த்தியினிடத்திலும் பூரணமான அன்பென்னும் சிரத்தையிராதாதலால் சிரத்தையும் சமத்தை விரும்புகிறது.

சமம் தமமுதலானவைகட்கு உதவியாயிருந்ததுபோல் தமம் முதலான 5-ம் சமத்திற்கு உதவியாகயிருக்கிறது எவ்வாறெனில் இரசம்பூசாத கண்ணாடியில் நேத்திரவிருத்தி தடுக்கப்படாதது போல, இந்திரிய வாயில்களை தடுக்காவிடின் மனமும் தடுக்கப்படுகிறதில்லை. இவ்விதமாகவே ஒன்றற்கொன்றும் ஒன்றற்கொன்று மாக உதவியாகவிருக்கின்றன. (விரிக்கிற் பெருகும்.)

இந்தத் தூலசரீரமாகிய இரதத்திற்கு இந்திரியங்கள் குதிரைகளாகவும், மனம் கடிவாளமாகவும், புத்தி சாரதியாகவும், ஆன்மா எசமானனாகவும் ஏற்பட்டிருக்கின்றது. எந்த எசமானனுடைய புத்தியென்னும் சாரதி சரியானவனா யிருக்கிறானோ

அவனுடைய இந்திரியங்களென்னும் குதிரைகள் நன்மார்க்கத்தில் சென்று எசமானனை மோட்சம் என்னும் பதியில் சேர்ப்பிக்கும். சாரதி தவறுடையவனாயின் இந்திரியங்கள் என்னும் குதிரைகள் தவறான துன்மார்க்கவழியில்சென்று நாகமென்னும் படுகுழியில் கொண்டு சேர்ப்பிக்கும். ஒரு வண்டிக்காரனைக் குறித்து நீ இன்னதெருவு இன்னார் வீட்டுக்குக் கொண்டுபோய்ச் சேர் என்று கூறிவிட்டு நாம் வண்டிக்குள்ளிருக்கும்போது அத்தச்சாரதி அதையுணராமல் வேறொரு தெருவழியாக ஓட்டமுயலும்போது ஹோ! வண்டிக்காரா! இந்தத்தெருவல்ல! அந்தத் தெருவழியாக ஓட்டிப்போ! என்று சொல்லிக் குறித்தவிடத்திற்குப்போய்ச் சேர்வதுபோல், துறவாச்சிரமத்தைப் பெற்றவன் (ஏனையோர்களும்) தனது புத்தியாகிய சாரதி தனக்குத் தோற்றியவாறு போகாமலும் இந்திரியக் குதிரைகள் சரியான வழியில் போகிறதாவென்றும் எசமானன் கவனித்துப் பார்த்துக்கொண்டிருந்து குறித்த விடத்திற்குப்போய்ச் சேரவேண்டியது. இவ்வாறு தவறாமல் செய்பவனே முமூட்சுவாவன் என்பதோடு சுருக்கமாகவே சாதனசதுட்டயம் முடிவுபெற்றது.

வேதாந்த பாஸ்கரன் 2-ம் பாகம்.

---

## பெண் கல்வி.

அலைகடலை ஆடையாகவுடுத்த இப்பூவுலகில் அருந்தவச்சிரேஷ்டர்களும், அருந்ததிபோன்ற அநேகம் உத்தமிகளும் செறிந்த நமது பரதகண்டத்தில் அநாதிகாலந் தொடங்கியே கல்வியென்னும் கற்பகக்கொடி தளிர்த்துப்பூத்து நறுமணம் வீசி வருகிறதென்று பல புராதன நூல்களினால் அறிகிறோம். அவ்வரிய கல்வியென்ற கற்பகமலர் ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவேயன்றி ஒரு பாலர்க்குமட்டும் உரித்தல்ல. ஏனெனில், பகுத்தறிவுடைய மானிடருக்கு தூலதேகத்தின் வளர்ச்சிக்கும் நோயின்றி வாழ்வதற்கும் உற்சாகத்தோடிருக்கவும் உணவு எவ்வாறு அவசியமோ அவ்வாறே பகுத்தறிவை அபிவிருத்திசெய்ய கல்வி அதியவசியமென்பதுஎவரும் மறுக்கொணாததோருண்மை

அப்பகுத்தறிவோ ஆண்பெண் இருவருக்கும் உண்டென்பதை எவரும் ஒப்புக்கொள்ளுவர். தூலதேகத்தைமட்டும் போஷித்துக்கொண்டு பகுத்தறிவாகிய சூக்குமதேகத்தைப் பெண்பாலர் போஷிக்கக் கூடாதென்று எவர்தான் சொல்லத்துணிவர். ஏன் அவர்களும் அவ்வுரிமையை அடையக்கூடாது. மேலும் ஆதிகாலத்திருந்த கார்க்கி, மைத்திராதேவி, ஔவை, சாரதாதேவி முதலியவர்கள் கல்வியில் தேர்ந்தவர்களாயும் பண்டிதை என்று மன்னர் மன்னர்களால் புகழப்பட்டவர்களாயும் விளங்கினூர்களன்றோ ஏதேனும் ஒரு காரியத்தைச்செய்ய முற்படின் புராதன பழக்க வழக்கப்படி செய்யவேண்டுமென்றும் மூதறிஞர் முறையைப் பின்பற்ற வேண்டுமென்றும் வாய்ப்பறைசாற்றும் நாம் ஏன் இதற்குமட்டும் புராதன காவியங்களுக்கு செவிசாய்க்காதும் மூதறிஞராகிய மேற்குறிப்பிட்டவர்களின் முறையைப் பின்பற்றாதும் இருத்தல்வேண்டும். அன்றியும் கல்விக்கரசியாகிய கலைவாணியே கன்னிகையாயிருக்க அவளினத்தாராகிய மாதரசிகட்கு கல்வியுரித்தல்ல; அவளினத்தாரல்லாத ஆடவர்க்கு மட்டும் பொருத்தமென்று எவ்வாறு சொல்வது? அது மாதா வயிறெரிய மகேஸ்வரபூசை செய்ததை ஒக்குமன்றோ!

கல்வியைக்கற்று தங்கள் அறிவை அவசியம் இருபாலரும் அபிவிருத்தி செய்துகொள்ள வேண்டுமென்பதை இன்னும் அறிவுறுத்தற் பொருட்டு, "நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்று ஆன்றோராலும் அறிஞர்களாலும் அனவரதம் புகழ்ந்து கொண்டாடப்பெற்ற நாலடியாரில்,

"குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யா மென்னு நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு."

என்றதால் ஆண்மகற்கு குஞ்சி அழகும், பெண்மகற்கு மஞ்சளழகும் மிகப் பொருத்தமாகவின் இருபாலாரையும் குறித்து கல்வி அவசியமெனக் கூறினர். முற்காலத்திருந்த பல கற்புக்கரசிகள் சங்கீதம், பரதநாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சிபெற்று

விளங்கியதோடு இலக்கண விலக்கியங்களில் பாண்டித்யம்பெற்று பாமாலைபுனைந்து மிருக்கின்றூர்கள்.

சில காலவேறுபாட்டால் நடுவில் மாதர்கள் சல்விகற்ப தின்றி அடுப்பங்கரைகாத்த அசடாய்ப் போகும்படி நேரிட்டது. நாகரீகம் முதிர்ச்சிபெற்ற இக்காலத்தில் அன்னியநாட்டார் என் உங்கள் மங்கையருக்கும் உங்களுக்குள்ள உரிமையைக் கொடுத் தல் கூடாதென்றும், அனியாயமாய் ஆடுமாடுகளைப்போல் அவ ரைக் கண்டிக்கிறீர்களென்றும் ஏளனம் செய்கிறூர்கள். இதைக் கேட்ட அரிவையிற் சிலர் அன்னூர் வலையிற்பட்டு வாடிவருந்தவும் நேரிட்டது.

நவீன நாகரீகம் மிகப்பரவிய இக்காலத்தும் சிலர் கன்னியர் கல்வி பயில்வதனுவசியம்; அவ்வாறு கல்வி பயிற்றுவிப்பின் முற் காலத்து நடந்ததாகப் பிதற்றும் "தமிழறியும் பெருமாள்" கதை யைப்போன்று அவரவர் இஷ்டப்படி வரம்பிகந்த காரியங்களைச் செய்ப அனுகூலமாயிருக்கும் என்றும்,

(இன்னும் வரும்)

S V. G. பாலன், திருவாரூர்.

---

## CHASTITY கற்புடைமை,

(69 - ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்பின் வல்லமையால்,

1. தமயந்தி தன்னைக் கற்பழிக்க நினைத்த வேடனை எரித் தாள். 2. உத்தம பத்தினி சாவித்ரி, கேவலம் பார்த்த மாத்தி ரத்தில் ஸகல ஜீவராசிகளும் வெருண்டோடும் ரூபமும் சக்தியும் வாய்ந்த எமதர்மராஜனையும் வாதில்வென்று தன் புருஷன் உயி ரை மீட்டாள். 3. அக்கினி ஆற்றைச் சந்திரமதி குளிரச்செய் தாள். 4. நளாயனி ஏழுநாட்கள் வரையிலும் பொழுதுவிடியா மற் செய்தாள். 5. சீதை நினைத்தமாத்திரத்தில் பூமிபடீரென்று வெடிக்கும்படி செய்தாள்.

சகோதரிகாள்! மேற்கண்ட காரியங்களை ஸாதிக்கக்கூடிய சக்தி உங்களுக்கு உளதா என்று யோசித்துப்பாருங்கள். கேவ

லம் பயனற்ற தங்கம், வைரம் முதலிய அணிகளைவிட்டு கற்பென்னும் ஒப்பில்லா அணியை அணிவீர்களேயாகில் நீங்கள் கடவுளையும் வெல்லலாம். கற்புடையவளுக்குக் கடவுளும் அஞ்சுவார் என்பது உண்மை மொழியல்லவா?

தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரும், கற்புடை மங்கையர் பெய்யெனப் பெய்யுமழை, என்ற கருத்தையமைத்து,

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை." என்றார்

கற்பலங்காரியாகிய வாசுகி இறந்தபோது அவள் கணவரான திருவள்ளுவர் மிகவும் நொந்து தனக்கு அவள்செய்த பணிவிடைகளை நினைத்து,

அடிசிற் கினியாளே அன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழுந்த பேதையே போதியோ
என்றூங்கு மென்க ணிரா. என்றார்

(இதன்பொருள்.) எனக்கு அன்னமூண்பித்தலில் இனியவளே! என்னிடத்து அன்புடையாளே! என் சொற்படி காரியங்களைச் செய்வதில் பிழைசெய்யாத பெண்ணே! முன்னே நான் நித்திரைசெய்ய என் கால்களை வருடிக்கொண்டிருந்து பின்பு தூங்கி, எனக்குமுன் நித்திரைவிட்டெழுந்த பெண்ணே! என்னை விட்டுப் போகின்றாயோ! இராக்காலத்தில் என் கண்கள் எப்படி உறங்கும்.

"அரைக்காசுக்குப்போன கற்பு ஆயிரம் கொடுத்தாலும் வராது" என்ற கருத்தையடக்கி,

எடுத்தாலும் பிச்சை யமுதூன்றே யில்லையாகி லுயிர்
விடுத்தாலும் வாசிநட் பில்லார் மனையில் விருந்தெனப்போய்
அடுத்தாவதே தரைக் காசுக்குப் போனகற் பாயிரம்பொன்
கொடுத்தாலும் தான்வருமோ அச்சுதா னந்த கோவிந்தனே.

என்று கோவிந்தசதகம் ஒலமிடுகின்றது.

"எதிரிற்பேசும் மனையாளிற் பேய்நன்று"
... ... ... ... கூற்றமே
இல்லிக் கிசைந்தொழுகாப் பெண்"

ஏறினென் றெதிர்நிற்பாள் கூற்றம்; சிறுகாலை
அட்டில் புகாதாள் அரும்பிணி, அட்டதனை
உண்டி உதவாதாள் இல்வாழ்பேய் இம்மூவர்
கொண்டானைக் கொல்லும் படை.

(இன்னும் வரும்) விளமல் சேஷாத்திரி.

---

## (CHARITY) தர்மம்.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

[தர்மத்தின் மேற்பட்ட செல்வமுமில்லை, அத்தர்மத்தை மறத்தலைப் பார்க்கினும் கேடில்லை]

தருமம் என்றால் பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் இந்நான்கும் கடிந்து நடந்தது. தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும்,

அழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்காவியன்ற தறம்,

எனத் திருவாய்மலர்ந்தருளி யிருக்கின்றனர். இதனால் மேற் சொன்ன துர்க்குணங்களோடு கலந்து நடந்தது அறமெனப் படாதென்பதுங் கொள்க.

அஞ்ஞானம், அகங்காரம், அவா, விருப்பு, வெறுப்பு என்னும் ஐவகை குற்றங்களால் வருகிற நல்வினை தீவினை என்னும் இருவகை வினைகளும் உள்ளவரைக்கும் உயிர் உடம்போடுகூடி நின்று அவற்றின் பயன்களாகிய சுகதுக்கங்களை அனுபவிக்குமாதலால் அக்காலமுழுதும் வாழ்நாளெனப்படும். ஒருவன் தர்மத்தைச் செய்தால் அது அவ்வாழ்நாள் வரும்வழியை அடைக்கும் கல்லாகும். பிறப்பையகற்றும்.

"நாம் இப்போது இளையோமாகலின் இறக்குநாளில் செய்வோமென்று நினையாமல் தருமத்தை தினந்தோறும் செய்தல் வேண்டும். அப்படிசெய்யப்பட்ட தருமமானது உடம்பினின்று உயிர்போங்காலத்து அவ்வுயிர்க்கு அழியாத் துணையாம்" என்னுங் கருத்தையமைத்து பொய்யாமொழிப் புலவரும்,

அன்றறிவாமென்னு தற்ஞ்செய்கமற்றது
பொன்றுங்காற் பொன்றாத்துணை.

எனக் கூறியுள்ளார். சரீரத்தோடு எல்லாம் நாசமடைகையில் தர்மமொன்றே மரணத்திலும் உயிரைப் பின்தொடரும்.

ஏகஏவஸுஹிருத்தர்மோ நிதனேப்யனுயாதிய:
சரீரேணஸமம்நாசம் ஸர்வமன்யத்துகச்சதி.

இத்தகைய பெருமைபொருந்திய அறம் ஏழை,பணக்காரன் இருவருக்கும் பொதுவானது. பொருளில்லாவிடினும் தர்மசிந்தனை இருந்தால்போதும். இதுபற்றியே அரும்பெருங்கிழவி ஔவை மூதாட்டியார் "அறஞ்செய்" என்று கூருமல் அறஞ்செய விரும்பு; அதாவது (பொருளில்லாவிடினும்) தருமத்தை செய்ய மனதில் எண்ணமாவது கொள் எனக் கூறியுள்ளார்.

தருமமாகிய நல்வினையை இடைவிடாமல் மனம், வாக்கு, காயம் இம்மூன்றினாலும் செய்தல்வேண்டும். இம்மூன்றினால் செய்யப்படும் அறங்களென்னவெனின் நற்சிந்தையும், நற்சொல் லும், நற்செயலுமாம்.

திருணானிபூமிருதகம் வாக்சதுர்த்திசஸூனிருதா
ஏதான்யபிஸதாம்கேஹே நோச்சித்யந்தேகதாசன

என்றபடி தர்மிஷ்டர்கள் ஏழைகளாகவிருப்பினும் தங்களிடமுள்ள புற்களாலாய மெத்தை, தங்குமிடம், தண்ணீர், இன்சொல் இந்நான்கினாலாவது உபசரிப்பார்கள்.

(அஹிம்ஸா பரமோ தர்ம:என்றபடி ஜீவஹிம்சை செய்யாமலிருப்பதே எல்லாத் தருமங்களிலும் தலைமை யுடைத்தாம். இதனைப்பற்றி சிவகாருண்யம் என்னும் வியாசத்தில் விவரிப்பாம்) ஆகையால் சகோதர சகோதரிகாள்! அரிதினுமரிதாகிய இம்மானிட யாக்கையைப்பெற்ற நாம் இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்று ஏங்கிடாமல் கிடைத்தற்கரிய இச்சரீர மிருக்கும்போதே "காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்றபடி தருமத்தை இடைவிடாமல்செய்து ஆன்மலாபமடைய முயலவேண்டும். கடவுளும் கிருபைபுரிவாராக.

R. பட்டு அய்யர், எல்லையம்மன் சன்னதி, விஜயபுரம்.

புலிவலம் ஸ்ரீ தெண்டாயுதபாணிக் கடவுள்மீது
மணிமுத்துநாயகம் என்னும் காரணப்பெயர் புனைந்த
ஞானபூபதி, ஸ்ரீ கருணையானந்த சுவாமிகள்
திருவாய்மலர்ந்தருளிய

# திருப்பாவணி என்னும்

# கந்தப்புகழ்.

இதில் நவீன நாகரீக பார்ஸி வர்னமெட்டுகளமைந்த இராக தாளங்களுடன் பரமானந்தத்தைத் தரும் கீர்த்தனங்கள், தேகப் பரவசஞ்செய்யும் பல்லவிகள், கல்மனமும் கரைந்துருகக்கூடிய அநுபல்லவிகள், பக்திரசக்கடலைப்புகட்டி ஆனந்தபாஷ்பம் சொரியச்செய்யும் சரணங்கள், கெம்பீரமும் சோகரசமும் பொருந்திய ஜாவளிகள், சொற்சுவை பொருட்சுவை நிறைந்து ததும்பி வாசிப்போர் உள்ளத்தை கொள்ளைகொண்டு என்ன வாக்கு! என்ன அருமை! என்று வியக்கும்படியான விருத்தங்கள் முதலியவை நிறைந்திருக்கின்றன. ஒவ்வொரு பாடலையும் பாடுபவரும் கேட்பவர்களும் திடுக்கிட்டு அதிசயித்து மயிர் கூச்சலடைந்து ஆஹா! ஆஹா!! பலே! பேஷ்! என்று சிரக்கம்பம் கரக்கம்பம் கொண்டு மெய்மறந்து பத்தி முத்தி அடையக்கூடிய விதமாக அமைந்துள்ளது.

முதற்பாகம் அண 0—2—0 | 2-ம்பாகம் அண 0—2—0
முருகர் தியானம் அண 1. | வேதாந்தபாஸ்கரன் ரூ. 1.

கருணாநிதி

# ஜீவகாந்த தீர்த்தம்.

இந்தத் தீர்த்தமானது சாதாரணமாய் ஆறு, குளம், ஏரி, கிணறு முதலியவைகளில் உள்ளதல்ல. நமது ஆன்றோர்கள் அனுபவித்து கையாண்டுவந்த முறைப்படி தை மாசி முதலான காலங்களில் பெய்யும் பனிநீரை பளிங்குப்பாத்திரங்களில் வாங்கி அதில் ஒரு மண்டலம்வரை மெஸ்மெரிஸ சக்தியால் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தி ஜுரம், வயிற்றுவலி முதலிய எல்லாவியாதிகட்கும் பரமசஞ்சீவியாகத் தயாரிக்கப்பெற்றுள்ளது. வியாதிக்குத்தக்கபடி அவ்வப்போது மெஸ்மெரிசம் செய்து அனுப்பப்பெறும். பாலர் முதல் விருத்தர் வரையில் உபயோகிக்கலாம். எவ்வித பத்தியமும் கிடையாது. ஜீவகாருண்யத்தை முன்னிட்டே குறைந்த விலை ஏற்படுத்தலாயிற்று.

2 அவுன்சுபாட்டில் 1-க்கு 0—8—0
டஜன் ஒன்றுக்கு 5—0—0
காலரா மாத்திரை பாட்டில் 1-க்கு 0—3—0

விலாசம் :—

மானேஜர்,
கருணாநிதி வர்த்தக சாலை,
ஞானசூரியன் ஆபீஸ்,
விஜயபுரம், திருவாரூர், S. I. Ry.

# ஜனங்களே! இன்னுமா தூங்குகிறீர்கள்?

## வேதாந்த பாஸ்கரன்

### என்னும் நமது மெய்ஞ்ஞான சூரியன் உதயமான பின்னரும் தூங்குவது

### ஞாயமா! ஞாயமா!!

அஞ்ஞான நித்திரை நீங்கி! மெய்ஞ்ஞான விழிப்படையுங்கள்!!

இவ்வுலகின்கண் ஆத்மலாபம் அடைய அனேக பக்குவிகள் எண்ணியும் (தூணைக் கட்டிப்பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்குதே! விடமாட்டேனென்குதே!! என ஓலமிடுபவரைப்போல்) பிரபஞ்சவாழ்க்கையில் அதிகமாக மனதை நுழைத்துக்கொண்டு ஐயோ! பிரபஞ்சம் விடமாட்டேனென்குதே? என்று வருந்துகின்றனர். தூணை நாம் பிடித்துக்கொண்டு விடமாட்டேனென்கிறோமா? தூண் நம்மைப் பிடித்துக்கொண்டு விடமாட்டேன் என்கிறதா? என்றறிந்தவர் சிலரே. ஆதலின் காட்டிலிருப்பினும் நாட்டிலிருப்பினும் கமல நீர்போல் பற்றற்றிருக்க வேண்டுமேயன்றி, மலை, குகை, முதலானவைகளில் வசிக்கவேண்டுமென்கிற நிர்ப்பந்தமில்லை

மரணமாவதோ இன்ன நேரமென்று காணுவது அசாத்தியமாயிருக்கிறது அறுப்பதற்கு கத்தி தீட்டுகிறபோதும் ஆடு அசைபோடுவதுபோல் காலமெல்லாம் கதை, காவியம், பகடி, பரிகாசவேடிக்கை விளையாட்டுகளில் பொழுதைப் போக்கிவிட்டு சாகப்போகிறகாலத்தில் சங்கரா! சங்கரா!! என்று பிதற்றுவதிற் பயனில்லை என்பதை ஆலோசித்து ஆத்மலாபம் பெற முயலுங்கள்.

தேன்வண்டானது தானும் தேனையுண்ணாமல் தேனை எடுக்க வருபவரையுங் கொட்டுகிற தன்மைபோல் இவ்வுலக வாழ்வையே சதமென நினைந்து, நீங்கள் ஆத்மலாபம்பெற முயலாவிடினும் முயற்சிப்பவர்களை தடுக்காதிருங்கள். ஆத்மானுசந்தானம் பெறுவதற்கு அருமை பெருமைவாய்ந்த நமது வேதாந்த பாஸ்கரன் ஓர் சிறந்த வழிகாட்டியாகும், ஏனெனில் சிலர் எழுதிய சரடு முரடான வசன நடைகளைப்போலின்றி நளினமான இனிய செந்தமிழ் வசன நடையில் பன்னூற்களிலிருந்தும், மேற்கோள் தீட்டி மிக அழகாயும், சமாசமாயும் எழுதப்பெற்றிருப்பதால் முஹம்மதியர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் முதலிய எல்லாமதஸ்தர்களும் வாங்கி வாசிக்கற்பாலதே. இந்நூலை வாசிக்காதவர்கள் வாஸ்தவத்தில் துர்ப்பாக்கியர்களே! தமிழ்க்கல்வி குன்றிய இக்காலத்தில் இத்தகைய நூல் வெளி வந்துலாவுவதானது தமிழ் நாட்டுக்கு எதிர்பாராத ஓர் பெரிய அதிர்ஷ்டமென்றே சொல்லவேண்டும்.

வேதாந்த பாஸ்கரன் விலை ரூ 1—0—0

யோக ரகசியம் (ஒருபாகம்) விலை அணா 0—6—0

விலாசம்:—மானேஜர், கருணாநிதி வர்த்தகசாலை, ஞானசூரியன் ஆபீஸ்,

விஜயபுரம்—திருவாரூர். S. I. Ry.

PRINTED AND PUBLISHED BY SWAMI KARUNAIYANANDA
at the KARUNANITHI PRESS, VIJAYAPURAM.